இயங்கும் நூலகங்கள்.

*162. வினா—திரு. பி. எஸ். மணியன் : மாண்புமிகு கல்வி-உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

மாவட்டந்தோறும் நடமாடும் நூலகங்களை நிறுவுகிற செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தமிழ் நாட்டில் இயங்கிவரும் நூலக ஆணைக்குழுக்கள், சில நடமாடும் நூலகங்களை நடத்தி வருகின்றன. ஆனால் மாவட்டந்தோறும் நடமாடும் நூலகங்கள் நிறுவ, செயற்குறிப்பு எதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

*163 Q—DR. H. V. HANDE : Will the Hon. the Minister for Education and Local Administration be pleased to state—

(a) whether it is a fact that a number of Mobile Libraries in Coimbatore district have been closed; and

(b) if so, the reasons therefor?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : (அ) ஆம்.

(இ) ஏப்ரல் 1970-லிருந்து ஆகஸ்ட் 1970 வரை 11 இயங்கு நூலகங்கள் இயங்கி வந்தன. இவைகளில் 5 இயங்கு நூலகங்கள் செப்டம்பர் 1970-லிருந்து இன்றளவும் இயங்கி வருகின்றன. 6 இயங்கு வாகனங்கள் அடிக்கடி சீர்கேடு அடைந்ததால் அவை நிறுத்தி வைக்கப்பட்டுள்ளன என்று மாவட்ட நூலக ஆணைக் குழுச் செயலர் அறிவித்துள்ளார். பழுது பார்க்கும் செலவு அதிகரித்தமையால் பற்றுக் குறையுடன் இயங்கி வரும் நூலக ஆணைக் குழுவுக்கு இதன் மேல் மேன்மேலும் செலவு செய்ய இயலவில்லை. இருந்தபோதிலும், அதிகமான இடங்களுக்குச் சென்று, இருக்கும் இயங்கு நூலகங்கள் உறுப்பினர்களின் எண்ணிக்கையை அதிகரிக்கச் செய்து, இயங்கு நூலக இயக்கத்தின் பயனை விரிவு செய்ய, நூலக ஆணைக் குழு ஆவன செய்யும்.

திரு. கே. டி. கே. தங்கமணி : சார், மாவட்டந்தோறும் இருக்கிற 'மொபைல் லைப்ரரி' வான்கள் ரிப்பேர் அடைவதால் அந்தத் திட்டம் சரியாக நடைபெறவில்லை. எனவே வான்கள் ரிப்பேர் ஆகாமல் அல்லது ரிப்பேர் ஆன வான்களை உடனடியாகப் பழுதுபார்க்க அரசு தக்க நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : வேறு எந்த மாவட்டத்திலும் இல்லாத அளவுக்கு கோவை மாவட்டத்தில் பதினொரு இயங்கு நிறுவனங்கள் வைத்திருக்கிறார்கள். அதில் ஐந்து இப்போது பணியாற்றி வருகின்றன, நிதிப் பற்றுக்குறை காரணமாக மீதமுள்ள ஆறு இயங்கு நிறுவனங்கள்—பழுதடைந்தவை—பழுதுபார்க்க முடியாததால் செயலற்று உள்ளன. விரைவிலே அவைகளை, நிதிவசதி ஏற்பட்டவுடன் செயல்படச் செய்தால் நிலைமை சீர்பட்டுவிடும். இப்போது மதுரை, சென்னை, கோவை முதலிய இடங்களில் இயங்கு நிறுவனங்கள் செயல்பட்டு வருகின்றன. மற்ற மாவட்டங்களிலும் ஒரு இயங்கு கிளை நூலகம் ஏற்படுத்துகின்றவகையில் நடவடிக்கை எடுக்கப்படவிருக்கிறது. அது, சம்பந்தப்பட்ட மாவட்ட நூலக ஆணைக் குழுவுடன் தொடர்பு கொண்டு முடிவு செய்யப்படும்.